**செய்தி வெளியீடு எண்:1306** **நாள்:09.12.2021**

# செய்தி வெளியீடு

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மூலம் 75–வது இந்திய சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா, மகாகவி பாரதியார் நூற்றாண்டு நினைவையொட்டி, அவரின் 139ஆவது பிறந்தநாள் நிகழ்வு 11.12.2021 தேதியிலும், 75–வது இந்திய சுதந்திர ஆண்டு விழா 12.12.2021 தேதியிலும், தென்னகப் பண்பாட்டு மையத்துடன், ஸ்ரீ தியாக பிரம்ம கான சபா (வாணி மகால்)வுடன் இணைந்து நடைபெறவுள்ளது. இவ்விழாவின் அழைப்பிதழ் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இவ்விழா பற்றிய நிகழ்ச்சிகள் விவரம்:-

11.12.2021 அன்று காலை 10.00 மணிக்கு வட மண்டல ஓவியக் கலைஞர்கள் பங்குபெறும் “ **பாரதியின் கவிதை வரி**” எனும் ஓவியப்போட்டி. இடம்:– வாணி மகால் வளாகம்.

11.12.2021 அன்று மாலை 6.00 மணிக்கு, திரு இராஜ்குமார் பாரதி அவர்கள் முன்னிலையில் “**பாரதி யார்**” எனும் நாடகம் இடம்:– வாணி மகால் அரங்கு.

12.12.2021 அன்று காலை 10.00 மணிக்கு அரசு கவின் கலைக் கல்லூரி மாணவர்கள் பங்குபெறும் “**விடுதலை வேள்வியில் தமிழகத்தின் பங்களிப்பு**” எனும் ஓவியப் போட்டி. இடம்:– வாணி மகால் வளாகம்.

12.12.2021 அன்று மாலை 6.00 மணிக்கு, “**வீரம் விளைந்த பூமி**” எனும் நாட்டிய நாடகம் இடம்:– வாணி மகால் அரங்கு.

மேற்கண்டுள்ள விழா குறித்த செய்திக் குறிப்பினை, சென்னை நாளிதழ்களில் வெளியிடுமாறு தங்களைக் கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**